செ.வெ.எண்.40 நாள்.15.09.2017.

திருநெல்வேலி அண்ணா விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருநெல்வேலி பிரிவின் சார்பில் மறைந்த முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினையொட்டி நடைபெற்ற அண்ணா விரைவு சைக்கிள் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

--------

திருநெல்வேலி அண்ணா விளையாட்டரங்கில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், திருநெல்வேலி பிரிவின் சார்பில் மறைந்த முன்னாள் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளினையொட்டி அண்ணா விரைவு சைக்கிள் போட்டிகள் இன்று (15.09.2017) நடைபெற்றது. அண்ணா விரைவு சைக்கிள் போட்டிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

இப்போட்டிகள் 13 வயது, 15 வயது மற்றும் 17 வயது என மூன்று பிரிவுகளாக ஆண்கள் மற்றும் பெண்களுக்கு நடத்தப்பட்டது. ஆண்களுக்கான போட்டிகள் 15 கி.மீ. மற்றும் 20 கி.மீ. தூரமும், பெண்கள் பிரிவில் 10 கி.மீ. மற்றும் 15 கி.மீ. தூரமும் போட்டிகள் நடத்தப்பட்டது. விரைவு சைக்கிள் போட்டியானது அண்ணா விளையாட்டு மைதானத்தில் துவங்கி, மாநகராட்சி ஆணையாளர் பங்களா, டிஐஜி பங்களா வழியாக திருச்செந்தூர் சாலை, விஎம்சத்திரம், புவி ஈர்ப்பு மையம் வழியாக சென்று அதே பாதையில் திரும்பவும் அண்ணா விளையாட்டு அரங்கினை வந்தடைய வேண்டும். ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களை பெறுபவர்களுக்கு பதக்கங்களும், முதல் பத்து இடங்களை பெறுபவர்களுக்கு தகுதிச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் திரு.வீரபத்திரன், பயிற்றுநர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள், மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.